

கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் நாளை (25-01-2025) கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் வீர வணக்கநாள் பொதுக்கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடுகள் செய்வது குறித்து ஆலோசிக்க நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மறைமலைநகர், நந்திவரம் & கூடுவாஞ்சேரி நகர கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட கழக துணை செயலாளர்கள் வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, நகரச் செயலாளர்கள் ஜெ. சண்முகம், எம்.கே.டி.கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## சென்னை மாநகராட்சியில்

# ரூ.10 கோடியில் பெண்களுக்கு 93 உடற்பயிற்சிக் கூடங்கள்!

### மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு செயலாகிறது!

சென்னை,ஜன.24-

மேயர் அறிவித்த 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெண்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, முதற்கட்டமாக ரூ.10 கோடி மதிப்பில் பெண்களுக்கான 39 உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

மேயர் அறிவித்த 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆண்களுக்கான உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பெண்களுக்கான பிரத்யேக உடற்பயிற்சிக் கூடங்கள் ஏதுமில்லை என்ற குறையை போக்கிடும் வகையிலும், பெண்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டும் மாநகராட்சிப் பகுதிகளில் பெண்களுக்கான EmpowHER உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், மேயரின் 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெண்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, முதற்கட்டமாக ரூ.9.97 கோடி மதிப்பில் பெண்களுக்கான 39 உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 22 பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், 4 உடற்பயிற்சிக் கூடப் பணிகள் தொடங்கும் நிலையில் உள்ளன. 13 உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவற்றில் திருவொற்றியூர் மண்டலம், வார்டு-10க்குட்பட்ட பூந்தோட்டம் தெருவில் ரூ.35.30 இலட்சம் மதிப்பிலும், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-68க்குட்பட்ட ஜவஹர் நகர், 2வது தெருவில் ரூ.43 இலட்சம் மதிப்பிலும், அம்பத்தூர் மண்டலம், வார்டு-85க்குட்பட்ட இரயில் விஹார் பகுதியில் ரூ.39.20 இலட்சம் மதிப்பிலும், வார்டு-87க்குட்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, 2வது தெருவில் ரூ.39.20 இலட்சம் மதிப்பிலும், வார்டு-90க்குட்பட்ட வெல்கம் காலனி, முதல் தெருவில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், வார்டு-92க்குட்பட்ட மங்கள் ஏரி பூங்காவில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், வார்டு-80க்குட்பட்ட தாங்கல் ஏரி பூங்காவில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், வார்டு-82க்குட்பட்ட ரெட்ஹில்ஸ் சாலை, டாடா கம்யூனிகேஷன் பூங்காவில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், வார்டு-83க்குட்பட்ட மதனங்குப்பம், தாங்கல் ஏரி பூங்காவில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், வார்டு-81க்குட்பட்ட மதனங்குப்பம், கிருஷ்ணாபுரம் பூங்காவில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-128க்குட்பட்ட இளங்கோ நகர் பிரதான சாலையில் ரூ.38.30 இலட்சம் மதிப்பிலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-38க்குட்பட்ட பட்டேல் நகரில் ரூ.35 இலட்சம் மதிப்பிலும், வார்டு-47க்குட்பட்ட சுகந்திரபுரம், முதல் தெருவில் ரூ.26 இலட்சம் மதிப்பிலும், இராயபுரம் மண்டலம், வார்டு-53க்குட்பட்ட பி.பி.அம்மன் கோயில் தெருவில் ரூ.9.93 இலட்சம் மதிப்பிலும், படவேட்டம்மன் கோயில் தெருவில் ரூ.9.93 இலட்சம் மதிப்பிலும், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-110க்குட்பட்ட காமராஜபுரம் முதல் தெருவில் ரூ.18.95 இலட்சம் மதிப்பிலும், அண்ணாநகர் மண்டலம், வார்டு-95க்குட்பட்ட திருநகர் பூங்காவில் ரூ.4.5 இலட்சம் மதிப்பிலும், வார்டு-97க்குட்பட்ட வெள்ளாளத் தெரு பூங்காவில் ரூ.4.5 இலட்சம் மதிப்பிலும், வார்டு-101க்குட்பட்ட புல்லா அவென்யூ ஸ்கேடிங் பூங்காவில் ரூ.5 இலட்சம் மதிப்பிலும், வார்டு-103க்குட்பட்ட டவர் பூங்காவில் ரூ.5 இலட்சம் மதிப்பிலும், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-196க்குட்பட்ட கண்ணகி நகர், 12வது பிரதான சாலையில் ரூ.40 இலட்சம் மதிப்பிலும், அடையாறு மண்டலம், வார்டு-170க்குட்பட்ட பள்ளிப்பட்டு பிரதான சாலையில் ரூ.40 இலட்சம் மதிப்பில் என மொத்தம் ரூ.5.44 கோடி மதிப்பில் பெண்களுக்கான 22 புதிய உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், ஆலந்தூர் மண்டலம், வார்டு-159க்குட்பட்ட காமராஜர் தெருவில் ரூ.8.24 இலட்சம் மதிப்பிலும், இராயபுரம் மண்டலம், வார்டு-56க்குட்பட்ட ஆசீர்வாதபுரத்தில் ரூ.11.75 இலட்சம் மதிப்பிலும், பெருங்குடி மண்டலம், வார்டு-181க்குட்பட்ட ஜகநாதன் தெருவில் ரூ.17.18 இலட்சம் மதிப்பிலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட காந்திஜி முதல் தெருவில் ரூ.38.26 இலட்சம் மதிப்பில் என மொத்தம் ரூ.75.43 இலட்சம் மதிப்பில் 4 உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டும் பணிகள் தொடங்கும் நிலையில் உள்ளன.

திருவொற்றியூர் மண்டலம், வார்டு-1க்குட்பட்ட எண்ணூர் விரைவுச் சாலையில் ரூ.35.3 இலட்சம் மதிப்பிலும், மணலி மண்டலம், வார்டு-19க்குட்பட்ட எம்.எம்.டி.ஏ. 2வது பிரதான சாலை பூங்காவில் ரூ.93.55 இலட்சம் மதிப்பிலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-48க்குட்பட்ட கன்னிக் கோயில் தெருவில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், அம்பத்தூர் மண்டலம், வார்டு-91க்குட்பட்ட மேற்கு முகப்பேர், முதல் பிளாக் பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், வார்டு-88க்குட்பட்ட பூங்கா சாலை, மில்லினியம் பூங்காவில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-110க்குட்பட்ட அப்பாசாமி தெருவில் ரூ.9.7 இலட்சம் மதிப்பிலும், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-133க்குட்பட்ட வெங்கட்நாராயண சாலை, நடேசன் பூங்காவில் ரூ.9.6 இலட்சம் மதிப்பிலும், வார்டு-136க்குட்பட்ட சிவன் பூங்காவில் ரூ.13.70 இலட்சம் மதிப்பிலும், அண்ணாநகர் மண்டலம், வார்டு-102க்குட்பட்ட கிரசன்ட் விளையாட்டு மைதானத்தில் ரூ.4.99 இலட்சம் மதிப்பிலும், வார்டு-104க்குட்பட்ட ஏ.எஃப். பிளாக், 3வது தெருவில் ரூ.6.06 இலட்சம் மதிப்பிலும், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-192க்குட்பட்ட விநாயகர் கோயில் தெருவில் ரூ.45 இலட்சம் மதிப்பிலும், வார்டு-199க்குட்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பகுதியில் ரூ.40 இலட்சம் மதிப்பிலும், வார்டு-194க்குட்பட்ட வண்ணான்கேணி தட்சன் தெருவில் ரூ.45 இலட்சம் மதிப்பில் என மொத்தம் ரூ.3.78 கோடி மதிப்பில் பெண்களுக்கான 13 உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## முதல்வர் மருந்தகம் அமைக்கும்

# பணிக்கான பயிற்சிகள் துவக்கம்!

### கூட்டுறவுத்துறை அறிவிப்பு!

சென்னை, ஜன. 24-

மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்கும் வகையில் தொழில்முனைவோர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பொதுப்பெயர் (ஜெனரிக்) மருந்துகளையும் பிற மருந்துகளையும் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதற்கட்டமாக முதல்வர் மருந்தகங்கள் 1000 இடங்களில் துவக்க தமிழ்நாடு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதல்வர் மருந்தகம் அமைக்க www.mudhalvarmarundhagam.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தொழில்முனைவோர்களிடமிருந்து 638 விண்ணப்பங்களும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து 490 விண்ணப்பங்களும் ஆக மொத்தம் 1128 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. பரிசீலனை செய்யப்பட்டு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு ரூ.1.50 இலட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) முதற்கட்ட அரசு மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் மருந்தகம் விண்ணப்பித்துள்ள தகுதியான தொழில்முனைவோர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூன்று கட்டங்களாக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக நேற்று 22.01.2025 தொழில்முனைவோர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் மருந்தாளுனர்களுக்கு மருந்து இருப்பு பராமரிப்பு, விற்பனை செய்யும் முறை, சட்டப்பூர்வமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் மென்பொருள் பயன்பாடு குறித்து மென்பொருள் வல்லுனர், மருந்து கட்டுப்பாட்டு துறை மற்றும் மருத்துவ சேவைக் கழகத்தின் வல்லுனர்கள் மூலம் அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் காணொளிக்காட்சி கூட்ட அரங்கில் பயிற்சி வழங்கப்பட்டது. முதல்வர் மருந்தகம் விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.

மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் மருந்தகங்களுக்கு நேரடியாக சென்று களப்பயிற்சி வழங்கப்படும். பின்னர், விண்ணப்பித்த தகுதியான தொழில்முனைவோர் மற்றும் கூட்டுறவுச் சங்க மருந்தாளுனர்களுக்கும் சென்னையில் நேரடியாக பயிற்சி வழங்கப்படும்.

முதல்வர் மருந்தகம் அமைப்பதற்கான பணிகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்பார்வையிட அனைத்து மாவட்டங்களிலும் கூடுதல் பதிவாளர் நிலையில் மாமண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைத்து முதல்வர் மருந்தக கடைகள் மற்றும் மாவட்ட சேமிப்புக் கிடங்குகளை ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்தி விரைவில் முதல்வர் மருந்தகம் துவங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.என்.சுப்பையன், தெரிவித்துள்ளார்.

---

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! தி.மு.தனியரசு வரவேற்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. – கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ.-சண்முகநாதன் – எழும்பூர் கோபி சிறப்புரை!

சென்னை, ஜன,24

சென்னை வட கிழக்கு மாவட்ட தி.மு.க. திருவொற்றியூர் கிழக்கு பகுதி மற்றும் மாணவர் அணி தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாளை (25.1.205 சனிக்கிழமை) அன்று மாலை 6 மணிக்கு பெரியார் நகர் திருவொற்றியூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர்கள் மண்டலக்குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஏ.வி.ஆறுமுகம், வை.ம.அருள்தாசன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எம்.எம்.செந்தில் ஆகியோர் அனைவரையும் வரவேற்றுப் பேசுகின்றனர்.

ஆர்.சி.ஆசைத் தம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன், டி.சி.வி. ராஜகுமாரி, த.கார்த்திகேயன், எம்.எல்.சரவணன்,எஸ்.தமிழ்ச்செல்வன், சி.முனுசாமி, கவீ.சதீஷ்குமார், எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், டி.டி.எம்.பாபு,, ஒய்.நந்திவர்மன், பி.சந்தானகிருஷ்ணன், எஸ்.பார்1கர், ஆர்.ரஜினி பாபு, பி.எஸ்.சைலஸ், ம.ஜெயராமன், ஆர்.டில்லி, வி.பழனிவேல்,அ.அப்துல் சலிம், கே.கார்த்திகேயன், ம.ஜெயராமன், ம.எத்திராஜ்,ஆர்.டி.மதன்குமார்,டி.லிவிங்ஸ்டன், ராஜ்குமார், எம்.எஸ்.தினேஷ்வேலன், பி.நந்தகுமார், லிங்கேஸ்பரந்தாமன்,ரா.ராதிகா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாநில மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் தி.நகர் சண்முகநாதன், எழும்பூர் கோபி,டாக்டர் கலாநிதி வீராசாமி எம்பி.,கே.பி.சங்கர் எம்.எல்.ஏ ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரைய யாற்றுகின்றனர்.

இதில் வீ.கண்ணதாசன், ஜி.சந்திரபோஸ், வீ.கவிகணேசன்,ஆர்.பத்மநாபன்,மிசா பா. மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி பாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன்,டி.ஏ.ராஜி, இரா.முருகேசன்,எஸ்.சாந்திபக்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெய்மதன்,ஜி.துக்காராம், புழல் எம்.நாராயணன்,ஜி.தயாளன், மீ.வே.கர்ணாகரன், ஜி.ராஜேந்திரன், சி.அற்புதராஜ், எஸ்.சந்தகோபால் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். டி.சி.வி. மணிகண்டன் நன்றி கூறுகிறார்.

---

### அருந்ததியர் உள் ஒதுக்கீடு மூலம் அருந்ததியர் மாணவர்களின் கல்வி இடைநிற்றல் தடுக்கப்பட்டிருக்கிறது.!

# “திராவிட மாடல்” அரசின் திட்டத்தால் மேன்மை அடைந்துள்ளது அருந்ததியர் சமூகம்!

### இரா.அதியமான் அறிக்கை!



சென்னை ஜன:24

இதுகுறித்து இரா. அதியமான் விடுதுள்ள அறிக்கை வருமாறு;

இந்தியச் சமூகத்தில் பொருளியலற்ற சமூகமாகவும், ஏற்றத் தாழ்வுகளாலும். சாதிய பாகுபாடுகள் மற்றும் தீண்டாமை வன்கொடுமைகளாலும் அதிகமாக பாதிப்பிற்குள்ளாகியதில் பட்டியல் சமூகத்திற்குள்ளே மிகவும் பின்தங்கிய சமூகம் என்றால் அருந்ததியர் சமூகம் தான். தொடக்கக் கல்வி நிலைக் கூட தாண்ட இயலாத சமூகம் என்பதும் கசப்பான உண்மையே.

பின்னாளில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சமூக நீதி கொள்கையாலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிடல் மாடல் ஆட்சியின் மூலம் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கிய அருந்ததியர் உள் ஒதுக்கீட்டின் நன்மையால் இன்றைக்கு பல திட்டங்கள் மூலம் அம் மக்களுக்கும் அச் சமூக மாணவர்களுக்கும் பரவலான முன்னேற்றம் கிடைக்கப்பட்டிருக்கிறது. என்பதை தி ஹிந்து ஆங்கில நாளிதழ். முரசொலி நாளிதழ், விடுதலை நாளிதழ். தீக்கதிர் நாளிதழ். தினகரன் நாளிதழ், சன் நியூஸ் மற்றும் அமைச்சர் மதிவேந்தன் அவர்களின் அறிக்கையின் வாயிலாக புள்ளி விபரங்களோடு விரிவான தொகுப்பு கட்டுரையை வெளியிட்டு உலகறிய செய்ததோடு அதன் பலன் நிருபிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆதித்தமிழர் பேரவை சார்பில் நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் புரட்டல் மற்றும் பொய்யர்களின் முகத்திரை கிழிக்கப்பட்டு ஸ்டிக்கர் ஒட்டுபவர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

சமூகத்தில் எல்லா நிலைகளிலும் பாதிப்படைந்த ஓர் சமூகத்தை கை தூக்கி விடுவது ஓர் அரசின் கடமை. அதற்கு அடிப்படையாக இருந்தது நீதிக்கட்சி. 1928 ல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டத்தை நிறைவேற்றி அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்குமான சமூகநீதியை சாத்தியமாக்கியது.

அதன் நீட்சியாகத்தான் பின்னாளிலே தமிழக முதல்வர்களான பேரறிஞர் அண்ணா. முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற தலைவர்களின் ஆளுமைகளால் பல்வேறு திட்டங்கள், ஆக்கப்பூர்வமான சட்டங்கள் மூலம் பட்டியலின, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகள் கிடைக்கப் பெற்று கல்வி பொருளாதார வளச்சியடைந்த சமூகங்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

ஆனாலும் தொடக்க கல்வியில் ஒற்றை இலக்கை தாண்டாமல் இருந்த அருந்ததியர் சமூகம் 2009 ல் திமுக அரசு ஏற்படுத்திக் கொடுத்த உள் ஒதுக்கீட்டால் உயர் கல்வி. மருத்துவம். பொறியியல்.சட்டம் போன்ற படிப்புகளில் மூன்று இலக்க எண்ணிக்கையைஅடைந்திருக்கிறது.

தமிழ்நாடு அரசு கல்வியில் மேற்கொண்டிருக்கும் சீரிய திட்டங்களால் குறிப்பாக இன்றைக்கு அருந்ததியர் சமுதாய மாணவர்களின் எண்ணிகையும் சேர்க்கையும் உயர்ந்திருக்கிறது.

இதனால் ஆரம்பக் கல்வியை முழுமை அடையாமல் இருந்த “இடைநிற்றல்” முற்றிலும் நீக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமா மாணாக்கர்கள் பயில வருவதற்க்கு பல்வேறு திட்டங்களான காலை உணவுத் திட்டம், மதிய உணவுத் திட்டம், இலவச பஸ் பயணம், இலவச சீருடைகள், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், உயர் கல்விக்கான ஊக்கத் தொகை, உதவித் தொகை, மகளீர் தங்கும் விடுதிகள் இப்படி பல்வேறு நலத்திட்டங்களையும் உதவிகளையும் செய்து வருகின்ற காரணத்தால் அடித்தட்டிலே இருக்கக் கூடிய இந்த மக்கள் விழிப்புணர்வு பெற்று இந்தக் கல்வியை துவக்கத் தொடங்கியிருக்கிறார்கள் அதன் காரணமாக இன்றைக்கு மருத்துவக் கல்லூரி. சட்டம். பொறியியல் போன்ற கல்லூரிகளில் படிப்பதற்க்கான வாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது.

இதற்கு முற்றிலும் முழு காரணமாக திமு கழக அரசு மற்றும் மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

ஆதலால் அருந்ததியர் உள் ஒதுக்கீட்டின் பயனை கல்வியின் மூலம் கிடைக்கப் பெற்று “இடைநிற்றல்” தடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் உயர்கல்வி பயின்று 3% உள் ஒதுக்கீட்டினால் இந்த கடைசி மூன்றாண்டில் அதிக அளவிலான வேலை வாய்ப்பு பெறப்பட்டுள்ளனர். இதன் மூலம் திராவிட மாடல் அரசுக்கும் அதனை தலைமையேற்று வழி நடத்தும் தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும் ஒட்டுமொத்த அருந்ததியர் மக்கள் சார்பிலும் ஆதித்தமிழர் பேரவை சார்பிலும் மனமார்ந்த நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவை நிறுவன தலைவர் இரா. அதியமான் தெரிவித்துள்ளார்.

---

## வேலூரில் மாவட்ட மாணவரணி சார்பில்

# வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

வேலூர், ஜன,24

வேலூர் மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வருகிற சனிக்கிழமை அண்ணா கலையரங்கம் அருகில் நடக்கிறது.

கூட்டத்திற்கு மாவட்ட திமுக மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ்தலைமை தாங்குகிறார்.

துணை அமைப்பாளர் அரவிந்த் அசோகன், மாநகர அமைப்பாளர் ஆர்.அருண் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள்.

நிகழ்ச்சியில் எழும்பூர் சட்ட மன்ற உறுப்பினரும், கழக சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்,எல்.ஏ, நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன்,

தலைமை கழக பேச்சாளர் ஆவடி கா.மு.ஜான், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

முடிவில் மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர். பிரபாகரன் நன்றி கூறுகிறார்.



தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் வடக்கு , தெற்கு பகுதி, மற்றும் தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பத்மாவதி திருமண மண்டபத்தில் பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் தலைமையில் நடைப்பெற்றது. 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர் ஆகியோர் முன்னிலையில் மாவட்டச் செயலாளரும்–அமைச்சர் தா.மோ அன்பரசன் ஆலோசனை வழங்கினார். இதில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர் ராஜா எம்,எல்,ஏ; பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள் தாம்பரம் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் செயல் வீரர்கள் பெரும் திரளாக பங்கேற்றனர். இறுதியாக மாமன்ற உறுப்பினர் எஸ் புகழேந்தி நன்றி தெரிவித்தார்.